அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 29/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7
1988 ஆகஸ்ட் 30 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்கக் கூட்டுத்தாபனத் தலைவர்கள் அனைவருக்கும்.

நாட்டில் ஏற்படும் குழப்பங்களின் விளைவாக அரசாங்க உத்தியோகத்தர்களின் உடைமைகளுக்கு அல்லது அசைவுள்ள சொத்துக்களுக்கு அல்லது இரண்டிற்கும் சேதமேற்படுமிடத்து அவர்களுக்கு சம்பள முற்பணம் வழங்கல்.
தாபன விதிக்கோவை அத்தியாயம் XXIV

---

பிரிவு 14ஐப் பின்வருமாறு புகுத்துக;-

"14. நாட்டில் ஏற்படும் குழப்பங்களின் விளைவாக அரசாங்க உத்தியோகத்தர்களின் உடைமைகளுக்கு அல்லது அசைவுள்ள சொத்துக்களுக்கு அல்லது இரண்டிற்கும் சேதம் ஏற்படுமிடத்து அவர்களுக்கு சம்பள முற்பணம் வழங்கல்"

14:1 நாட்டின் எப்பகுதியிலாவது எந்நேரத்திலாவது ஏற்படும் ஒரு குழப்பத்தின் விளைவாக அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரின் உடைமைகளுக்கு அல்லது அசைவுள்ள சொத்துக்களுக்கு அல்லது இரண்டிற்கும் சேதம் ஏற்படுமிடத்து (கணவன், மனைவி இருவரும் அரசாங்க உத்தியோகத்தர்களாகவிருக்கும் பட்சத் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக) பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அத்தகையவொரு சலுகை அளிக்கப்பட வேண்டுமெனபதை ஒத்துக் கொள்ளக் கூடிய குழப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளதெனத் தீர்மானிக்குமிடத்து அவருக்கு:-

(1) அவர் உறுதிப்படுத்தப்பட்ட சேவையில் சம்பள முற்பணம் வழங்கும் தினத்தில் குறைந்தது பத்து (10) வருட சேவையைப் பூர்த்தி செய்து இருக்குமிடத்து ஆகக் கூடியது இரண்டு வருட (படிகள் இன்றி) புதிய திரட்டிய சம்பள முற்பணம் வரை, அல்லது

(11) அவர் பத்து (10) வருடங்களுக்குக் குறைந்த சேவைக் காலத்தையுடையராய் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருக்குமிடத்து ஆகக் கூடியது ஒரு வருட புதிய திரட்டிய (படிகள் இன்றி) முற்பணம் வரை

பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படலாம்.

(அ) வழங்கப்படும் கடன் தொகையானது திணைக்களத் தலைவர் திருப்திப்படு வகையில் நிருபிக்கப்பட்ட சேதத்தின் அளவினை ஒத்ததாக இருத்தல் வேண்டும்.

(ஆ) கடனைத் திருப்பிக் கொடுக்கும் காலமானது 8 (எட்டு) வருடங்களுக்கு மேற்படலாகாது.

(இ) வட்டியானது வருடமொன்றுக்கு 7.2 (ஏழு தசம் இரண்டு) ஆக இருத்தல் வேண்டும்.

(ஈ) சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் இருவ தனிப்பட்ட உத்தரவாதிகளாகவிருத்தல் வேண்டும், (பிரேரிக்கப்பட்ட உத்தரவாதிகள் இருவரும் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கிணங் பொருத்தமானவர்களாகவும் தகுதியுடையவர்களாகவும் உள்ளனர் என அக்கடனை வழங்க அனுமதிக்கும் அதிகாரி தாமே திருப்தியுறல் வேண்டு

(உ) முற்பணத்தைப் பெறுபவர் 55 வயதை அடையும்போது கடன் தொகையையும் வட்டியையும் பூரணமாக அறவிடக் கூடிய வகையில் முற்பணத் தொகை அல்லது தவணைப் பணத்தொகை அல்லது இரண்டும் நிர்ணயிக்கப்படல் வேண்டும்;

(ஊ) ஓய்வு பெறுவதற்கு முன்னர் கடன் தொகையைச் செலுத்தி முடித்து விடுவதாக அல்லது ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் தமது ஓய்வூதியத்தை மாற்றி மீளச் செலுத்துவதற்குக் கடன் தொகையில் மிச்சம் ஏதேனு மிருப்பின் அந்த மிகுதித் தொகையை தனது மாற்றிய ஓய்வூதியத்தின் அல்லது ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கு ஓய்வூதியப் பணிப்பாளருக்கோ திணைக்களத் தலைவருக்கோ அதிகாரம் வழங்குவதாக மாற்றமுடியாத ஒரு ஒப்பந்தத்தின் பேரில் 55 வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு அரசாங்க உத்தியோகத்தருக்கும் சம்பள முற்பணம் வழங்கலாம். தாபன விதிக்கோவையின் 23ஆம் பின்னிணைப்பில் காணப்படும் மாதிரிப் படிவம் மேற்கூறிய மாற்றமுடியாத ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்குப் பயன்படுத்தப்படல் வேண்டும்.

க சம்பள முற்பண மீளளிப்பு 8 வருடங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு விரிவுபடுத்தப்படும் ஓர் அடிப்படையில் தவணைக் கட்டண வழி மீளளிப்பு கணக்கிடப்படுவதற்கு ஆட்சேபணை எதுவும் இல்லை; அத்துடன் (எ) 55 வயதை அடையுமுன் கடன் வாங்கியவர் மரண மடைந்தால்/ஏதேனும் ஒரு சூழ்நிலையில் ஓய்வு பெற்றால் அது நிகழ்ந்த சந்தர்ப்பத்தில் கடன் தொகையிலும் வட்டியிலும் மீளச் செலுத்தப்படா திருக்கும் எஞ்சிய தொகையானது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் மாற்றிய ஓய்வூதியத்திலிருந்து அல்லது பணிக்கொடையிலிருந்து முதலில் அறவிடப்படும் தொகையாகக் கருதப்பட வேண்டும்.

.2 (அ) இச்சம்பள முற்பணமானது அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது அவரது தாரத்திற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள கடன் ஏதேனும் உண்டானால் அதற்குப் புறம்பானதும் அதற்கு மேலதிகமானதுமாகும்.

(ஆ) முற்பணம் பெறுபவரும் உத்தரவாதியும் நி.பி. 238இலும் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3ஆம் பிரிவிலும் விதிக்கப்பட்டுள்ள 40 நூற்றுவீத அல்லது 33 1/3 நூற்றுவீதக் கழிவு எல்லைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

(இ) 237,250,313,358,381,386 இலக்கங்கள் உடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளின் கீழ் ஏலவே சம்பள முற்பணம் பெற்ற உத்தியோகத்தரொருவருக்கு இன்னுமொரு தடவை அத்தகைய தேவை ஏற்பட்டால் அவருக்கு இந்த ஏற்பாடுகளின் பிரகாரம் பெற்றுக்கொள்ளக் கூடிய முற்பணத்துக்கும் முன்னர் பெற்றுக் கொண்ட முற்பணத்தில் மீளச் செலுத்தாதுள்ள மிகுதித் தொகைக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை வழங்கலாம்.

.3 இச்சம்பள முற்பணத்திற்கான விண்ணப்பமானது தாபனவிதிக்கோவையின் பின்னிணைப்பு 29இன் கீழ் விதித்துரைத்த படிவத்தில் தயாரிக்கப்படலாம். இப்படிவத்தின் பிரதி இச்சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

.4 ஒப்பந்தத்திற்கும் பிணை முறிக்கும் முறையே 1/-ரூபா பெறுமதியுள்ள முத்திரையும் 10/-ரூபா பெறுமதியுள்ள முத்திரையும் ஒட்டப்படுதல் வேண்டும்.

.5 பதவிநிலைத் தர உத்தியோகத்தர் ஒருவருக்கு சம்பள முற்பணம் வழங்குவதெனில் அது அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும், ஏனையோர் விடயத்தில் சம்பள முற்பணம் வழங்குகை அந்தந்த திணைக்களத் தலைவரினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

.6 இச்சம்பள முற்பணம் வழங்கும் முறையானது ஒவ்வொரு திணைக்களத்திலும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கெனவுள்ள தனிவகை முற்பணக் கணக்கு வாயிலாகச் செயற்படுத்தப்படல் வேண்டும்.

14:7 திணைக்களத் தலைவர்கள் அனைவரும் நி.பி.503இன் நியதிகளின்படியும், 1983.03.18ஆந் திகதியிட்ட 19ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்தினது நியதிகளின்படியும் அவசியமேற்படும் பொழுது முற்பணத்தொகைகளின் எல்லைகளை மீளாய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

14:8 முதலின் தவணைக் கட்டண அறவீடு "அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு -பி கணக்கு" என்பதில் கணக்கு வைக்கப்படல் வேண்டும். இக்கணக்கிலிருந்து இந்த முற்பணம் வழங்கப்படும். வட்டி அறவீடு வருமானத் தலைப்பு 5: பெற்ற வாடகைகள், வட்டி, இலாபங்கள், பங்கிலாபங்கள், உபதலைப்பு 2, வட்டி, விடயம் 4: ஏனையவை என்பதில் வரவு வைக்கப்பட்டு வேறாகக் கணக்கிடப்பட வேண்டும்.

14:9 கொடுப்பனவையும் முதலின் தவணைக் கட்டணங்களையும் சமப்படுத்தப்பட்ட மாதாந்த வட்டியையும் பதிவதற்கு சி.சி. 10 என்பதிலமைந்த தனியானதொரு பதிவேட்டைப் பேணுதல் வேண்டும். மாதாந்த வட்டியானது தாபன விதிக்கோவையின் 21ஆம் பின்னிணைப்பில் காணப்படும் சூத்திரத்தின்படி கணிக்கப்படல் வேண்டும்.

14:10 இடமாற்றம் செய்யப்பட்ட ஒரு அரசாங்க உத்தியோகத்தரின் விடயத்தில் சாதாரணமாக முற்பணக் கணக்கிலிருந்து செய்யப்படும் முற்பண அறவீடுகள் தொடர்பாக என்ன நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ அவற்றையே இங்கும் பின்பற்ற வேண்டும். அதாவது முற்பணக் கணக்கின் நிலுவையானது பிரஸ்தாப உத்தியோகத்தரை விடுவிக்கும் திணைக்களத்துக்கு அவரை ஏற்கும் திணைக்களத்தினால் அதன் "அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம்-பி கணக்கு" என்பதில் பற்று வைப்பதன் மூலம் செலுத்தப்படல் வேண்டும். அதன் பின் குறிப்பிட்ட திகதியில் எல்லா அறவீடுகளும் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் தவணைக் கட்டணங்கள் தொடர்ந்தும் அறவிடப்படல் வேண்டும்.

14:11 இத்திட்டத்தின் கீழ் முற்பணத்தைப் பெற்ற ஒரு அரசாங்க உத்தியோகத்தர் சேவையிலிருந்து நீங்குமிடத்து கொடுப்பனவு, தாபனப்பிரிவுகள், அந்த உத்தியோகத்தரிடமிருந்து நிலுவையாகவுள்ள மிகுதி முற்பணத்தை (சமப்படுத்தப்பட்ட வட்டி உட்பட) அவரது ஓய்வூதியம்/பிணைப்பணம்/பணிக்கொடை அல்லது அவருக்குச் செலுத்தப்படவுள்ள வேறு தொகைகளிலிருந்து அறவிடப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

14:12 இந்த ஏற்பாடுகள் 1987.1.1ஆந் திகதி தொடக்கம் வலுவிலிருக்கும்.

அரசாங்க கூட்டுத்தாபனங்களும் இந்நோக்கத்திற்காக தமது நிறுவனங்களைக் கருத்திற் கொண்டு இதனை ஒத்த திட்டங்களைச் செயற்படுத்தல் வேண்டும்.

ஒப்பம்: டி.பி.ஐ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

பின்னிணைப்பு 29

(XX1V - 14:3)

நாட்டில் ஏற்படும் குழப்பங்களின் விளைவாக அரசாங்க உத்தியோகத்தர்களின் உடைமைகளுக்கு அல்லது அசையும் சொத்துக்களுக்கு அல்லது இரண்டிற்கும் சேதமேற்பட்டுள்ள அவர்களுக்கு சம்பள முற்பணம் கோருவதற்கான விண்ணப்பம்.

---

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்:-

2. பதவிப்பெயர்:-

3. உத்தியோக முகவரி:-

4. வருடாந்தச் சம்பளம்:- (படிகள் நீங்கி)

5. விண்ணப்பிக்கும் தொகை:-

6. விண்ணப்பதாரர் மதிப்பிடப் பட்டபடி சேதத் தொகை:-

7. சொத்துக்களின் சேதத்திற்கும் அல்லது அசையும் சொத்துக்களின் இழப்பிற்கும் அல்லது இரண்டிற்கும் ஏற்பட்ட சேதத்தின் பரிமாணத்திற்கும் ஆதாரமான ஆவணச் சான்றுகள்:-

..............................
விண்ணப்பதாரரின் ஒப்பம்

திகதி:-